புரட்சிப் பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2053 | டிசம்பர் 29, 2022 | புரட்சி 21 | முழக்கம் 50 | விலை: ரூ.3.00

## விடுதலை இராசேந்திரன் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டன

# முதல்வர் நேரில் மரபுரிமைத் தொகை வழங்கினார்





***கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் எழுதிய 59 நூல்களை தமிழக அரசு நாட்டுடைமையாக்கியது. அதற்கான மரபு உரிமைத் தொகையாக ரூ.15 இலட்சத்துக்கான காசோலையை தமிழக முதல்வர் நேரில் வழங்கினார்.***

'புரட்சிப் பெரியார் முழக்கம்' ஆசிரியர், பெரியாரியலை தன் வாழ்வியலாக்கி, கழகத்தை குடும்பமாக்கி, பெரியாரிய பத்திரிக்கையாளராக 50 ஆண்டுகளைக் கடந்தும் எழுதிக் கொண்டிருக்கும் கழகத்தின் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் நூல்களை தமிழ்நாடு அரசு 59 நூல்களை நாட்டுடமையாக்கியது.

22.12.2022 பகல் 11 மணியளவில் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரனிடம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நாட்டுடமையாக்கப் பட்டதற்கான மரபு உரிமை காசோலையை வழங்கினார். அப்போது கழகத் தலைவர் கொளத்தூர் மணி, விடுதலை இராசேந்திரன் இணையர் பேராசிரியர் சரசுவதி, தலைமைக் கழகச் செயலாளர் தபசி குமரன் உடனிருந்தனர்.

தொடர்ந்து, இலாயிட்ஸ் ரோட்டில் அமைந்துள்ள அண்ணா சிலைக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி மாலை அணிவிக்க தோழர்கள் முழக்கம் எழுப்பினர். அங்கிருந்து ஊர்வலமாகச் சென்று இராயப் பேட்டை பெரியார் படிப்பகத்தில் தந்தை பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து தோழர்கள் முழக்க மிட்டனர்.

விடுதலை இராசேந்திரன் எழுதிய புத்தகங்களின் அட்டைப் படம் 'டி-சட்டைகளாக' அச்சடிக்கப்பட்டு தோழர்கள் அணிந்து ஊர்வலமாக வந்தனர். கழகத்தின் இணையதள பொறுப்பாளர் விஜயகுமார் மற்றும் திருப்பூர் மாவட்டத் தலைவர் முகில்இராசு ஆகியோர் இணைந்து இந்த முயற்சியை செய்தனர்.

வரவேற்புரையைத் தொடர்ந்து வி.எம்.தெரு பெரியார் படிப்ப கத்தில் கழக பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஆற்றிய உரை, "தமிழ்நாடு அரசு பெரியாரிய சிந்தனைகளை அரசு வழியாக அங்கீகரித்திருக்கிறது. இது எனக்கு கிடைத்த சிறப்பை விட, பெரியார் கொள்கைக்கு கழகத்துக்கே கிடைத்த ஒரு சிறப்பு ஆகும். பெரியார் இயக்கத்தில் இருந்தவர்களின் நூல்களை அரசுடைமையாக்குவதும் இது தான் முதல் முறை. இந்த நூல் களை அரசுடைமையாக்க வேண்டும் என்று விவாதம் நடைபெற்ற போது, குழுவில் இருந்த சில தமிழ் அறிஞர்கள், 'வழக்கமாக இலக்கியம் சார்ந்த நூல்களைத் தானே தேர்ந்தெடுப்போம். விடுதலை இராசேந்திரன் அவர்களின் நூல்கள் இலக்கியம் சார்ந்தவை அல்லவே. இதற்கு எப்படி வழங்குவது?' என்ற விவாதம் எழுந்துள்ளது. அந்தக் குழுவிலே இருந்த பெரியாரியல் வாதிகள், 'இலக்கியமாக இருக்க வேண்டும் என்ற அவசியம் கிடையாது. சமூகவியலைப் பற்றி எழுதியதற்கும் நாம் நாட்டுடமை யாக்குவதற்கு வாய்ப்புண்டு. பெரியாரியல் சிந்தனை என்பது சமூகவியல் சிந்தனை. அதற்கும் அந்த உரிமை உண்டு' என்று வாதாடி, அதற்கு ஒப்புதல் தந்துள்ளார்கள். அமைச்சர் தங்கம் தென்னரசு இதற்கான தேர்வுப் பட்டியலைத் தேர்வு செய்தார். இதில் பல நூல்கள் ஒன்றிய அரசுக்கு எதிரானவையாகும். ஆனாலும் கருத்துரிமை அங்கீகரிக்கப் பட்டிருக்கிறது. இவற்றை நூலகங் களிலும் பயன்படுத்தலாம் என்பது அவ்வளவு சாதாரணமான செய்தி இல்லை. திராவிட இயக்க உணர்வு உள்ள ஆட்சியால் மட்டும் தான் இதைச் செய்ய முடியும்.

இந்த நூல்களெல்லாம் என்னைப் பொறுத்தவரை அவ்வப்போது சமூக - அரசியல் சூழலின் தேவைகளுக்காக எழுதப்பட்டவை. காலத்தின் சூழல் கருதி எழுதிய நூல்கள் தான் இவை. அந்தந்த காலகட்டத்தில் இப்படிப் பட்ட கருத்துரைகளை தெளிவுரை களை மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும், எதிரிகளின் வாதங்களை முறியடிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் என்னால் கடுமையாக உழைத்து எழுதப்பட்டவை. இப்படி 60 நூல்களின் எண்ணிக்கை வந்துள்ளது. நாட்டுமையாக்கப்பட உள்ளது என்று கேள்விப்பட்டவுடன் அதை நான் மிக இயல்பாகத்தான் எடுத்துக் கொண்டேன். எனக்கு கிடைத்த மகிழ்ச்சி என்பதைவிட இயக்கத் தோழர்களுக்கு இதில் கிடைத்த மகிழ்ச்சிதான் எனக்கான உண்மையான மகிழ்ச்சி என்று கருதுகிறேன். நமது தோழர்கள் ஒவ்வொருவரும் இது இயக்கத்திற்கு கிடைத்த சிறப்பு என்று கருதுகின்றனர்.

தமிழக முதலமைச்சருடன் சந்திப்பு மிகவும் மகிழ்வாக இருந்தது. மிகுந்த மகிழ்வோடு உரையாடிக் கொண டே இருந்தார்.

விருது வாங்கும் முன் முதலமைச்சர், 'சமூக ஊடகங்களில் நீங்கள் கொடுத்து வரும் பதிலடிகளை தொடர்ச்சியாக நான் கண்காணித்துக் கொண்டு வருகிறேன். நீங்கள் அதை நிறுத்திவிடக் கூடாது, தொடர்ச்சியாக நீங்கள் அதை செய்து கொண்டே இருக்க வேண்டும்' என்ற ஒரு வேண்டுகோளையும் அவர் விடுத்தார். நிகழ்வுகள் முடிந்த பிறகு கழகத் தலைவரையும் என்னையும் காத்திருக்கச் சொல்லி 20 நிமிடம் வரை பல்வேறு சமூக அரசியல் நிகழ்வு களைச் சுட்டிக் காட்டி தனியே பேசி அதற்கான நேரம் ஒதுக்கினார். தமிழ் நாட்டில் அரசு சார்பில் சமூகநீதிக் காவலர் வி.பி.சிங் சிலையை நிறுவ வேண்டும். அதை ஒரு சமூக நீதி விழாவாகக் கொண்டாட வேண்டும், இந்தியாவில் அவருக்கு எங்கேயும் சிலை இல்லை. என்ற எனது விருப்பத்தைத் தெரிவித்தேன். 'பரிசீலிக்கிறேன்' என்றார்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி, அரசாங்கத்தின் கல்வித் துறையின் பல செயல்பாடுகளைப் பற்றி முதலமைச் சரிடம் எடுத்து கூறினார். தொடர்ந்து கல்வித் துறை, நிர்வாகத் துறைப் பற்றியும் கூறினார். தொடர்ந்து அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களையும் சந்தித்தோம். காவிரிப் பாசனப் பகுதி மாவட்டங்களில் தொழில்துறைகள் வளர்ச்சி எதுவும் இல்லை அதற்கான முயற்சிகளை அரசு எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினேன். 'நானும் ஜெயரஞ்சனும் அதைப் பற்றித் தான் பேசிக் கொண்டிருந்தோம், செயல் படுத்துவோம்' என்று கூறினார். இங்கே ஒரு செய்தியைக் குறிப்பிட வேண்டும். நாட்டுமையாக்க வேண்டும் என்றால் நூலாசிரியரின் வேண்டுகாள் கடிதம் ஒன்று பெறப்பட வேண்டும் என்ற விதி இருந்தது. அதில் எனக்கு உடன்பாடு இல்லை என்று நான் கூறி விட்டேன். அதன் நியாயத்தைப் புரிந்து கொண்ட அமைச்சர் தென்னரசு அந்த விதியையே நீக்கியது குறிப்பிடத் தக்கது.

நமது தோழர்களின் கற்பனைத் திறனைப் பார்த்து நான் ஆச்சரியப் படுகிறேன். எனது நூலின் ஒவ்வொரு அட்டைப் படத்தையும் ஒவ்வொரு பனியன் சட்டையாக வடிவமைத்து தோழர்கள் அதை அணிந்து வரிசையாக நின்று, முழக்கங்களும் நூலின் அடிப்படையிலே எழுப்பி, நமது இளைஞர்களின் சிந்தனைத் திறன் வெளிப்படுத் தினார்கள். இப்படி சிந்திக்கும் இளைஞர்கள் என்பது ஒரு இயக்கத்திற்கு கிடைத்த சொத்து. பெரியாரியலை அடுத்த கட்டத்தை நோக்கி நகர்த்தும் இளைஞர் சக்தி நம்மிடம் உள்ளது. எண்ணிக்கையில் குறைவாக இருந்தாலும் புதிதாக வந்து கொண்டே உள்ளனர். புதிய இளைஞர்கள் எங்களைப் போன்ற வர்களைக் கடந்து சிந்தனைகளில் முன்னேறிச் சென்று கொண் டிருக்கின்றனர். அப்படி செல்வது தான் இயக்கத்தின் வளர்ச்சியாக இருக்க முடியும். எவ்வளவு இளைஞர்கள் அறிவுப் பூர்வமாக வளர்கிறார்களோ அப்போது தான் அந்த இயக்கம் வலிமை பெறும். எண்ணிக்கையில் மட்டும் இருந்து பயனில்லை. அதற்கு அடையாள மாகத்தான் தோழர்கள் அணிந்திருந்த பனியன் சட்டையைப் பார்க்கிறேன். இந்த மகிழ்வில் உங்களுடன் நானும் இணைத்துக் கொள்கிறேன். என் னுடைய மகிழ்ச்சியான தருணங்களில் முக்கியமானது என்னவென்றால் தோழர்களுடன் பயணிப்பது என்பதுதான். அதை தொடர்ந்து செய்து கொண்டே இருப்பேன் என்றார் விடுதலை இராசேந்திரன். ●

### இணையதள பொறுப்பாளர் விஜயகுமார் சீரிய பணி

விடுதலை இராசேந்திரன் 'புரட்சிப் பெரியார் முழக்க'த்தில் எழுதிய தலையங்கங்களை 6 தொகுதிகளாகத் தொகுத்தும் அவ்வப்போது கடந்த 20 ஆண்டுகளாக எழுதிய தொடர்களை நூல் வடிவாகத் தொகுத்தும் அதற்கான முழு உழைப்பு பொறுப்பை ஏற்று செயல்பட்டவர் - இணையதள பொறுப்பாளர் விஜயகுமார். 59 நூல்கள் உருவாக அடித்தளம் அமைத்த அவரை கழக சார்பில் பாராட்டுகிறோம்.

தலையங்கம்

## கோட்சே பரம்பரை

காங்கிரஸ் செய்தி தொடர்பாளர் கோபண்ணா எழுதிய மாமனிதர் நேரு நூல் வெளியீட்டு விழாவில் பேசிய தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின், சங் பரிவாரக் கும்பலை "கோட்சே பரம்பரை" என்ற வார்த்தைகளால் வர்ணிக்கிறார். கோட்சே பரம்பரை என்பது திராவிடர் இயக்கத்திற்கு பழகிப்போன ஒரு சொல் தான், காந்தியாரை சுட்டுக் கொல்லப்பட்ட அந்த காலத்தில் திராவிடர் இயக்க மேடைகளிலும் திராவிடர் இயக்க நூல்களிலும் அந்தக் கும்பலை சுட்டிக்காட்டுவதற்கு பயன்படுத்தப்பட்ட சொல் தான் கோட்சே பரம்பரை என்பதாகும்.

காந்தியார் சுட்டுக்கொல்லப்பட்டது மாலை 5:12 க்கு, ஆனால் அகில இந்திய வானொலி அவரது மறைவு செய்தியை ஒலிபரப்பியது 6 மணிக்குத்தான். அதற்கு முக்கிய காரணம், 'காந்தியை ஒரு முஸ்லிம் சுட்டுக் கொன்றுவிட்டார்' என்ற வதந்தியை இந்த கோட்சே பரம்பரை அப்போதே பரப்பியது. மவுண்ட் பேட்டன், காந்தி சுட்டுக் கொல்லப்பட்ட செய்தியை அறிந்து பிர்லா மாளிகை விரைந்த உடன் கூட்டத்திலிருந்த ஒரு சங்கி, 'காந்தியை ஒரு முஸ்லிம் சுட்டுக் கொன்று விட்டான்' என்று சொன்னவுடன்; 'முட்டாளே வாயை மூடு' என்று மவுண்ட் பேட்டன் அதற்கு பதிலளித்திருக்கிறார். 'காந்தியை சுட்டுக்கொன்றவன் ஒரு இந்து என்று உனக்குத் தெரியாதா?' என்று அவர் எதிர் கேள்விக்கேட்டிருக்கிறார். இதற்கிடையே காந்தியை ஒரு முஸ்லிம் சுட்டுக் கொன்றுவிட்டான் என்ற வதந்தியை நாடு முழுவதும் பரப்பி ஆங்காங்கே இஸ்லாமியர் களுக்கு எதிரான கலவரத்தையும் தூண்டிவிட்டார்கள்.

அகில இந்திய வானொலி நிலைய இயக்குநருக்கும், 'முஸ்லிம் ஒருவன் காந்தியை சுட்டுக் கொன்றுவிட்டான்' என்ற தவறான தகவலை பரப்பினார்கள், உண்மை செய்தியை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகத்தான் அகில இந்திய வானொலி தேசத் தந்தையின் மறைவை 5 மணி 12க்கு மறைந்தாலும் 6 மணிக்கு ஒலிபரப்பியது. அந்த செய்தியைக் கூட காந்தியை சுட்டுக் கொன்றவன் ஒரு இந்து என்று மதத்தை அடையாளப்படுத்தி அறிவிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

அப்போது குரு கோல்வால்கர் சென்னையில் இருந்தார். காந்தி சுட்டுக் கொல்லப்பட்ட செய்தியை அறிந்ததும் அவர் உடனடியாக பம்பாய்க்கு விரைந்தார். நாக்பூர் ஆர்.எஸ்.எஸ். தலைமை அலுவலகத்திற்கு சென்றார், அங்கே சங்கிகள் அனைவரும் கூடியிருந்தார்கள். அப்போது வெளியே காங்கிரஸ்க்காரர்கள் பல்லாயிரக்கணக்கானோர் திரண்டு பார்ப்பன எதிர்ப்பு முழக்கங்களுடன் அந்த மாளிகைக்கு தீ வைத்து உள்ளே இருக்கிற அனைவரையும் கொளுத்தி விடுவதற்குத் திரண்டிருந்தனர். அப்போது பம்பாய் மாகாண உள்துறை அமைச்சராக இருந்த டிபி.மிஸ்ராவிற்கு கோல்வால்கர் அவசரமாக தொலைபேசி செய்து எங்களை எப்படியாவது காப்பாற்ற வேண்டும் என்று சொன்ன போது உங்களுக்குப் பத்திரமான இடம் சிறைச்சாலை தான் என்று சொல்லி அவர்களை சிறையில் அடைத்துக் காப்பாற்றினார் டி.பி. மிஸ்ரா.

மராட்டிய காங்கிரசில் பார்ப்பனர் எவரும் பொறுப்பில் இருக்கக் கூடாது என்று அம்மாநில காங்கிரஸ் முடிவெடுத்து அனைவரையும் பொறுப்பில் இருந்து நீக்கியது.

சென்னை வானொலி அதுவரை இல்லாத அளவுக்கு பெரியாரையும் அண்ணாவையும் அழைத்துப் பேச வைத்தது, பெரியார் அனைவரும் அமைதியைக் காப்பாற்றுங்கள், தமிழ்நாட்டில் எந்தக் கலவரமும் வெடிக்கக்கூடாது என்று அமைதிப்படுத்தி தமிழ்நாட்டில் மகாராட்டிராவைப் போல பார்ப்பனர் களுக்கு எதிரான ஒரு கலவரம் நிகழ்ந்துவிடாமல் தடுத்த பெருமை பெரியாருக்கு. இதை பார்ப்பனர்கள் நன்றி கெட்டத்தனமாக மறைத்து விட்டார்கள். அப்போது பெரியார் ஒரு கருத்தை சொன்னார், "இந்தியாவிற்கு காந்தி தேசம் என்று பெயர் சூட்டுங்கள்" என்று பெரியார் வேண்டுகோள் விடுத்தார். அந்தளவுக்கு கோட்சே பரம்பரை காந்தி யின் கொலையைச் கூட தானே சுட்டுக்கொன்று விட்டு அதை இஸ்லாமியர்களுக்கு எதிராகப் பயன்படுத்த விரும்பியது. அப்போது திராவிட இயக்க தளபதிகளில் தீவிர கொள்கைவாதியான ஏ.வி.பி. ஆசைத்தம்பி அவர்கள் 'காந்தியின் ஆத்மா சாந்தி யடைய' என்ற ஒரு நூலை எழுதினார். அந்த நூலுக்கு அப்போது தடைவிதிக்கப்பட்டது. அந்த நூலின் வரலாற்றுப் பின்னணி குறித்து கலைஞர் தொலைக்காட்சியில் இப்போது ஆசிரியராக இருக்கும் திருமாவேலன் ஒரு சிறப்பான நூல் ஒன்றையும் சில ஆண்டுகளுக்கு முன்பு எழுதியிருக் கிறார். அது மீண்டும் பிரசுரிக்கப்படுகிறப்பட வேண்டிய ஒரு நூலாகும். கோட்சே பரம்பரை இந்த வரலாற்று தகவல்களை எல்லாம் இளைய தலைமுறைக்கு கொண்டு செல்ல வேண்டும்.

# ராமன் பாலம்: உறுதியான ஆதாரம் இல்லை; பா.ஜ.க. ஆட்சி ஒப்புதல்

இலங்கைக்கு இராமேஸ்வரத்தி லிருந்து இராமன் பாலம் கட்டினான் என்றும், அந்தப் பாலத்தை இடித்துவிட்டு சேது சமுத்திரத் திட்டத்தை அமுல் படுத்தக்கூடாது என்றும் இந்துத்துவவாதிகள் கூப்பாடு போட்டுக் கொண்டிருந்தனர். சுப்ரமணிய சுவாமியும் உச்சநீதி மன்றத்திலே வழக்கு தொடர்ந்தார். இப்போது நிலைமை எல்லாம் தலைகீழாக மாறிப்போய் இருக்கிறது. 'இராமேஸ்வரம் கடல் பகுதியில் இராமர் பாலம் இருந்ததாகக் கூற முடியாது' இப்படிக் கூறியிருப்பவர், ஒன்றிய விண்வெளி மற்றும் அறிவியல் தொழில்நுட்பத்துறை இணை அமைச்சர் ஜிதேந்திர சிங். கூறி யிருக்கிற இடம் நாடாளுமன்றம். அவர் மேலும் கூறுகிறார், '19 ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய வரலாறு என்பதால், இராமர் பாலம் பற்றி துல்லியமாக கண்டறிய முடியவில்லை என்றும், செயற்கைக் கோள் படங்களில் கடலில் சில பாறைகள் இருப்பது போல் கண்டறியப்பட்ட போதிலும், அது இராமர் கட்டிய பாலம் என்று கூறுவது கடினம்' என்று தெரிவித்து இருக்கிறார்.

கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்று கூறுவார்கள், அதேபோல 19 ஆயிரம் என்று ஒரு கால வரையறையை அமைச்சர் நிர்ணயிக் கிறார். எந்த அடிப்படையில் இவர் 19 ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய வரலாறு என்று கூறுகிறார். புராணங்களுக்கு ஏதேனும் வரலாறு இருக்கிறதா? அறிவியல் தொழில்நுட்பம் அங்கே எந்த பாலமும் இல்லை என்று நிரூபித்து விட்டப் பிறகு, இப்படி ஒரு கட்டுக் கதையையும் சேர்த்து ஒரு உண்மையையும் சொல்ல வேண்டிய நிர்பந்தம், ஒன்றிய ஆட்சிக்கு ஏற்பட்டு இருக்கிறது. நம்பிக்கை என்பது வேறு. அறிவியல் உண்மை என்பது வேறு. அறிவியல் பூர்வமாக ஆய்வு செய்த அனைவரும் இராமர் கட்டிய பாலம் என்று கூறப்படும் எந்த கட்டுமானமும் இல்லை என்பதை ஏற்கெனவே தெளிவுபடுத்தி விட்டார்கள்.

அமெரிக்காவின் நாசா படம் பிடித்து அனுப்பி விட்டது என்றெல்லாம் கதை கட்டி விட்டவர்கள், அமெரிக்காவின் நாசா அப்படி எந்தப் படமும் அனுப்பவில்லை என்று மறுத்த போது, வாயை மூடிக் கொண் டார்கள். வெறும் நம்பிக்கையின் அடிப்படையில் தான் அயோத்தி யில் இராமன் பிறந்த இடத்தையும் தேர்வு செய்து மசூதியை இடித்து விட்டு பல்லாயிரக்கணக்கான ரூபாயை பாழடித்து கோவில் கட்டியிருக்கிறார்கள். ஒன்றிய ஆட்சி என்பது அறிவியலை அடியோடு புறக்கணித்துவிட்டு நம்பிக்கைகளை உயர்த்திப் பிடித்து மக்களை எப்படி ஏமாற்றிக் கொண்டிருக்கிறது என்பதற்கு ராமேஸ்வரம் கடல் பகுதியில் இராமர் பாலம் இருக்கிறது என்று கூற முடியாது என்று அவர்கள் ஒப்புதல் வாக்குமூலம் தருவதே சரியான சான்று ஆகும்.

## வினா விடை

- ஏழுமலையானுக்கு உலகம் முழுதும் அசையா சொத்து 85,705 கோடி ரூபாய்; தங்க நகைகள் 9,259 கிலோ. – **செய்தி**

  அசையா கடவுளுக்கு அசையா சொத்துக்கள்; அமலாக்கத் துறையால் அசைக்கவே முடியாது.

- திருப்பதியில் சொர்க்க வாசல் போக இலவச தரிசனம்; இலவச டோக்கன் உள்ளவர்களுக்கு மட்டுமே அனுமதி. – **செய்தி**

  'புண்ணியம்' எதுவும் செய்ய வேண்டாம்; டோக்கன் பெற்றாலே 'சொர்க்கம்' தான்!

- உ.பி. சிறைகளில் சைவ உணவுகள் மட்டுமே அளிக்கப்படுகிறது. – **செய்தி**

  தண்டிக்கப்பட்டு உள்ளே வந்த பிறகும் தண்டனையா?

- இராமேஸ்வரம் கடல் பகுதியில் இராமர் பாலம் இருந்ததாக உறுதியான சான்றுகள் இல்லை. ஒன்றிய பா.ஜ.க. ஆட்சி ஒப்புதல். – **செய்தி**

  அடுத்து ராமன் என்று ஒருவர் இருந்தான் என்பதற்கே உறுதியான சான்றுகள் இல்லை என்பதை எப்போது அறிவிக்கப் போகிறீர்கள்?

- கிருஷ்ண பகவானுக்கு உலகிலே உயரமான சிலை – குஜராத் பா.ஜ.க. ஆட்சி முடிவு. – **செய்தி**

  'பிரபஞ்ச'த்திலேயே உயரமான சிலையை அமையுங்கள்; அது தான் 'பிரபஞ்சத்தை'ப் படைத்தவனுக்கு மரியாதை!

## மணமகள் தேவை

புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி பகுதியைச் சேர்ந்த தோழர் இனியவன், வயது 26. பொறியியல் பட்டம் முடித்து சொந்தமாக வணிகம் நடத்தி வருகிறார்.

தோழருக்கு பெரியாரிய சிந்தனைக் கொண்ட பெண் தோழர் தேவை.

தொடர்புக்கு : 8903461202

# தமிழ் வாழ்வியலை வீழ்த்திய பார்ப்பனிய ஊடுருவல்

## பேராசிரியர் க. அன்பழகன்

*பேராசிரியர் க. அன்பழகன் நூற்றாண்டு நினைவாக அவர் 'விடுதலை' பெரியார் பிறந்த நாள் மலரில் எழுதிய கட்டுரையை (செப்.17, 1986) வெளியிடுகிறோம்.*


உலகத்தில் வளர்ச்சியும் வாழ்வும் பெற்றுள்ள மேல் நாட்டு மக்களும், சீனா, ஜப்பானியரும் நாகரிகத்தின் முகப்பில் அடி எடுத்து வைக்கும் முன்னரே, நாகரிக வாழ்வு கண்டு, நானில வகை கண்டு, நாடாளும் முறை கண்டு, ஒரு தனித் தன்மையுடன் வாழ்வாங்கு வாழ்ந்த தமிழர்கள் - தென்னாட்டுத் திராவிட மக்கள் - கடந்த சில நூற்றாண்டுகளாகவே வாழ்விழந்து, வளமிழந்து, உரிமை மறந்து, தலைதாழ்ந்து கிடக்கின்றனர்.

பத்தாயிரம் ஆண்டுகட்கு முன்னரே ஒரு மொழி கண்டு, எட்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரே கூடி வாழும் வாழ்க்கைக்கு முறை கண்டு, அய்யாயிரம் ஆண்டுகட்கு முன்னரே கோனாட்சிக்கு வழிகண்டு, இயற்கையில் முத்தமிழாய் முகிழ்த்த தமிழன் சிறப்பு கண்டு, சிந்தனையைச் செய்யுள் வடிவத்தில் கண்டு, மூவாயிரம் ஆண்டுகட்கு முன்னரே இலக்கியங்கட்கு இலக்கணங்கண்டு, ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னர் உலகம் வியக்கும் 'திருக்குறள்' என்னும் பொது அறம் விளக்கும் நூல் வடிவு பெறக்கண்டு, பண்பாட்டின் உயர் கோபுரத்தின் உச்சியில் ஏறி நின்று உலகு கண்டு, தென்னகத்தின் கிழக்கிலும், மேற்கிலும் - அலை கடலுக்கு அப்பால் உள்ள நாடுகளின் துறை முகங்களில் தமிழர்தம் வணிகக்கலங்களின் கொடிகள் பறக்கக் கண்டு, இணையின்றி வாழ்ந்த இனந்தான், படிப்படியாய்ச் சரிந்து, பகுத்தறிவைப் பயன்படுத்தும் திறன் இழந்து பரிதவித்து நிற்கின்றது இடைக்காலம் முதலாக.

**வைதிக சூழ்ச்சி :** உலகியல் தெளிந்து, இழைப்பினில் வாரா உறுதிகள் இல்லை என்னும் முடிவுடன், உழவினைப் போற்றி, வேளாண்மை வழிப்பட்ட நாகரிகம் வளர்த்து, 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்னும் பொது நோக்குடன் சமய நெறி - மதவழிகள் - பற்றிய எண்ணங்களில் பிணை யுண்டு தம்மை இழந்துவிடாது, முயற்சியுடையாராய், நாடு காக்கும் ஆற்றல் மறவராய் வாழ்ந்த மக்கள் தாம், பின்னர் வைதிக மறையவர் மன்னர் அவையைத் தமது களமாகக் கொண்டு, செல்வாக்குப் பெற்ற கால கட்டத்தில் அவர் தம் செல்வாக்குக்கு ஆட்பட்டு மெல்ல மெல்ல வைதிகத்தின் சூழ்ச்சி வலையில் சிக்குண்டவராயினர். வைதிகம் செல்வாக்கு பெறுவதற்கு முற்பட்ட காலத்தில் தமிழகத்தில் பரப்பப்பட்ட, சமண புத்த மதங்களின் கோட்பாடுகள் கற்றவர்களின் சிந்தனைக்கு ஒரு வகையில் விருந்தாகி, மற்றவர்களால் ஓரளவே பின்பற்றப்பட்டன. சில கொள்கைகள் பொதுவில் பரவலாக இடம்பெற்றன எனினும், மக்கள் குடும்பம் குடும்பமாக ஒரு மதச்சார்புடையவராகும் நிலை அன்று இல்லை. 'மதம்' இன்றேல் மனித வாழ்வு இல்லை - என்னும் நிலை அந் நாளில் இல்லை.

மேலும், சமணமும், பவுத்தமும் வைதிகரின் வேதங்களையும் அவற்றில் பேசப்படும் தெய்வங்களையும் யாகங்களையும் மறுப்பவை. சமய வழிகாட்டிகளையே தெய்வமாகப் போற்றுவதன்றித் தனியாக 'ஒரு கடவுள்' உண்டென்று ஏற்றுப்போற்ற உடன்படாதவை. ஆயினும், அந்த மதங்கள் மூலம் - பாவம் புண்ணியம், நிலையாமை, பிறவிகள், முற்பிறப்பு, பிற்பிறப்பு, கருமம், தலைவிதி முதலான கருத்துகள் மக்களிடையே பரவலாக இடம் பெறலாயின. எனினும், மதம் - அதற்கெனப் புறப்பட்ட துறவிகளுடைய கவலையாக இருந்ததன்றி, மக்களின் அன்றாட வாழ்வைக் குலைக்கவில்லை எனலாம்.

அக் காலத்தில் மக்கள் குறிப்பிட்ட ஒரு சமயம் - மதம் என்று போற்றிப் பின்பற்றும் நிலை இல்லையாயினும், பல காலமாக நிலவி வந்த மரபுடன் ஒட்டிய பலப்பல தெய்வங்களை வழிபட்டதுடன், பலி முதலான பல சடங்குகளையும் செய்துவந்தனர். குல தெய்வம் - குடும்பத் தெய்வம் - ஊர்க்காவல் தெய்வம் - முதலான பலவும் நடுகல் வழிபாட்டிலிருந்து கிளைத்துப் பெயர் பெற்றிருக்கலாம். அப்படிப்பட்ட மக்களைத்தான் வைதிகம் வளைத்தது. வேத வழியினரான ஆரியர்கள் மும்மூர்த்தி முதலாக இந்திரன், எமன், வருணன், அக்கினி முதலான பல தெய்வ வழி பாட்டினவாயினும், 'கடவுள்' என்னும் பொதுப்பெயர் குறிக்கக்கூட அறியாதவராயினும், தமது தெய்வங்கள் எல்லாம் ஆற்றல் மிக்கவை என்றும்,



அவர்களுக்குள்ளும் மும்மூர்த்திகளே மூலவர் என்றும் பரப்பத் தொடங்கிய காலத்தில், அதை மறுக்குமளவுக்கு மக்களுக்குத் தெளிவில்லை. "எங்கள் சாமி - பெரியசாமி எல்லா சாமிக்கும் எசமான் சாமி" என்னும் எண்ணத்தைப் பரப்பினர்.

நெடுங்காலமாகச் சிவனை (லிங்கத்தை) வழிபட்டு வந்த மரபினர் - சிவன் ஒன்றே தெய்வம் - என்னும் கொள்கை வழிபட்டவராயினும் வேத வைதீக ருத்திரனும் - சிவனும் ஒன்றென எண்ணுமாறு கற்பனைக் கதைகள் வளர்ந்ததால் சிவத்தின் தனித்தன்மை காப்பாற்றப்படவில்லை.

**தனித்தன்மைகள் மறைந்தன :** பல காலமாகக் கண்ணனை வழிபட்டு வந்தோர் அவனே திருமால் என்று போற்றினும் - கண்ணனே - கிருஷ்ணன் என்றும், திருமால் என்றதே விஷ்ணு என்றும் - புராணங்களைப் பெருக்கியதால் - கண்ணன் வழிபாடும் தனித் தன்மையை இழந்தது.

அதேபோன்று , குறிஞ்சி நிலத்து வேட்டுவத் தலைவன் முருகன் - சுப்பிரமணியனாகவும், கார்த்திகேயனாகவும் - கதைகளால் பிணைக்கப் பட்டதால் - தென்னாட்டு முருகன் தனித் தன்மையையும் மறைந்தது. மேலும் பழந்தமிழ் மக்கள் வழிபட்ட தெய்வங்கள் பலவற்றைக் குறித்தும் (அவைகள் முன்னர் வாழ்ந்து மறைந்த தமிழரின் முன்னோர் என்பது மறைக்கப்பட்டு) புராணப் பின்னணி உருவாக்கப்பட்டன. கற்பனையான தல புராணங்கள் வரையப்பட்டு, வழிபடும் தெய்வங்களின் பெயர்களும், ஊர்ப்பெயர்களுங்கூட வடமொழிப் பெயர்களாகத் திருத்தப்பட்டன.

தமிழ் மக்களிடம் ஊறி இருந்த - தெய்வ நம்பிக்கையே இவை பற்றிய உண்மைகளைத் தெளியும் அறிவை இழக்கச் செய்தது. மக்கள் தெய்வங்களை நம்பினர். தெய்வப் பெயர்களும், செய்திகளும் திரிபடைந்தாலும் அவற்றையும் நம்பினர். தெய்வங்களின் பெயரால் அவதாரம் என்றும், அற்புதம் என்றும், அதனை நம்பாவிடில் பாவம் என்றும் பேசிய சூதினையும் நம்பினர். இவைகளின் மூலம், வேதம், வேதமொழி, சமஸ்கிருதம், அது தேவ பாஷை, அது பூதேவர்க்கே சொந்தம் என்பதையும் நம்பினர். அந்த வடமொழியில் உள்ளது யாவுமே 'மந்திரம்', அவை ஆற்றல்மிக்கவை, ஆண்டவனை அழைக்க வல்லவை, அது படிக்கவும் கேட்கவும் கூடாதது; கேட்டால் நரகம் சேருவர் என்பதையும் நம்பினர். "வேதங்களுக்குத் தெய்வங்கள் கட்டுப்பட்டவை, வேதங்கள் பிராமணருக்கு கட்டுப்பட்டவை" என்பதை நம்பத் தலைப்பட்ட மக்களுக்கு, பிராமணர்கள் - பூ தேவர் ஆயினர். பூ தேவர்கள் கண்கண்ட தெய்வமாக, தெய்வங்களிலும் மேம்பட்டவராக எண்ணப்பட்டதுடன், பூ தேவர் அல்லாதாரின் வழிபாட்டுக்கும் உரியராயினர்.

ஓரினம் மற்றொரு இனத்தை அடிமை கொண்ட வரலாறுகளிலே கூட இதைப் போன்ற சூழ்ச்சி வேறு எங்கும் நிகழவில்லை.

கூட்டம் கூட்டமாக வாழும் இயல்பால் பல்வேறு கால கட்டங்களில் வடிவு கொண்ட குலப் பெயர்களால் தனித்தனி பிரிவாக வாழ்ந்த மக்களை - மனுநீதி தர்மத்தின்படி நாட்டப்பட்ட வருணாசிரமத்தின் சாதிப்பிரிவுக்கு உரியவராக நம்பச் செய்தனர். அதன் பயனாக, வேறு வேறு பிரிவாக இருந்த மக்கள் அனைவரும் 'பிராமணருக்கு'த் தொண்டு செய்ய பிறப்பிக்கப்பட்ட 'சூத்திரர்' என்ற எண்ணத்திற்கு ஆட்படுத்தப்பட்டனர். தமிழ் மக்களிடையே தாழ்நிலையில் இருந்த உழைப்பாளிகளான ஆதி திராவிடர்களை, தீண்டப்படாதவர்கள் பஞ்சமர்கள் எனவும் வகைப்படுத்தினர்.

பிராமணர்களுக்குச் சூத்திரர்களும் தீண்டப் படாதவர்களே! சூத்திரர்களுக்கும் தீண்டப்படாதவர்கள் பஞ்சமர்! வடநாட்டில் - ஆரியக் கலாச்சார ஆதிக்கம் வளர்ச்சியுற்ற துவக்க காலத்தில் வடிவு கொண்ட பிராமண, சத்ரிய, வைசிய, சூத்திரர் எனும் நால்வகை சாதி முறையும் - அதன் உயர்வு தாழ்வும் தென்னகத்தில் அதே போன்று இடம்பெறவில்லை இங்கே ஆரிய மத குருமார் வடிவம் கொண்ட பிராமணர்கள் பெற்ற செல்வாக்கின் பயனாக நாட்டு மக்கள் அனைவரையும் சூத்திரர் என பறைசாற்றியது.

**ஆரியர் திராவிடர் உறவின் விளைவு :** பிராமணியச் செல்வாக்கு முதலில் பல்லவர் ஆட்சியிலும் - பின்னர் இடைக்காலச் சோழர் ஆட்சியிலும் - வேரூன்றி ஏராளமான சதுர்வேதி மங்கலச் சாசனக் கட்டளைகளுடன் வளர்ந்து ஆதிக்கம் செலுத்தலாயிற்று. அதன் தொடர் விளைவாக - குறுநில மன்னர், நிலவுடைமையாளர், செல்வர், வணிகர் முதலானோர் பிராமணியத்தை ஏற்கும் நிலை வளர்ந்து, வருணாசிரமக் கேடு கால் கொண்டு, மற்ற மக்கள் (உழைப்பாளிகளும் உழவர்களும்) அதனை விரும்பினாலும் விரும்பா விட்டாலும், அதன் சூதான விளைவை அறியாமலே அதனை ஏற்கும் நிலை ஏற்பட்டது.

மக்களின் தெய்வ நம்பிக்கையை ஏதுவாகக் கொண்டு - அந்த மக்களின் தெய்வங்களின் வரலாற்றையே திரித்து, பெயரையும், வழிபாட்டு முறையையும் மாற்றி, தாமே அர்ச்சகருமாகி, மதகுருமார்களுமாகி, அந்த மக்களின் தன்னிகரற்ற மொழியையும் தாழ்த்தி ஒதுக்கி இழிவுப்படுத்தி, தமது இன மொழியான வடமொழியை உயர்வாகக் கற்பித்து, ஆதிக்க மொழியாக்கி, மற்ற மக்களையும் இழிப்பிறவிகளே என்று நம்ப வைத்து, தெய்வ பக்தியில் தம்மை மறந்த தன் இனம் அறியாத ஏமாளிக் கூட்டமாக ஆக்கி, ஒருவகை அடிமை மனப்பான்மையில் ஊறியவர்களாக மாற்றிவிட்ட வரலாறு தான், ஆரிய - திராவிடக் கலாச்சார உறவு கிடைத்த வரலாறு ஆகும்

வரலாற்று அடிப்படையில் - ஒரு தனி இனமாக, தனி நாட்டுக்குரியவராக, தனி ஆட்சி நடத்துபவராக, தனிமொழி, கலை, நாகரீகம், இலக்கியம், இலக்கணம், வாழ்க்கை நெறி (அறம்) கொண்டவராக, வேற்று இன மொழி, மத ஆதிக்கத்திற்கு இடமில்லாமலே 1500 ஆண்டுகளுக்கு முன்பு வரை வாழ்ந்த தமிழ் மக்கள் தாம், இன்று தமிழ் மொழி வழிபட்ட அடையாளம் ஒன்றைத் தவிர வேறு அடையாளங்களை வெளிப்படையாகக் காண முடியாத நிலையில் உருக்குலைந்துள்ளனர். மக்களின் தெய்வ நம்பிக்கையை மூலமாகக் கொண்டு, வைதீக மத தெய்வ வழிபாட்டை வடமொழி மூலம் புரோகிதர் நடத்தும் நிலையை உருவாக்கினர்.

(தொடரும்)

## தமிழ்க் குடில் இல்லத் திறப்புவிழா

கழகத் தலைவர் கொளத்தூர் மணி கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார். தோழர்கள் கிருஷ்ணவேணி - தேவராஜ் ஆகியோரது புதிய இல்லம் பல்லடம் அருகே வரபாளையம் கிராமத்தில் "தமிழ்க் குடில்" எனும் பெயரில் 04.12 2022 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி அளவில் திறந்து வைக்கப் பட்டது.

இல்லத்தை தோழர்களின் பெற்றோர்கள் கிட்டாள்- மாறன், இலட்சுமி - பழனிச்சாமி ஆகியோர் திறந்து வைத்தார்கள். இல்லத் திறப்பு விழாவிற்கு ப.மாறன் தலைமை தாங்கினார்கள் தே. சுப்பிரமணியன் - ராதாமணி ஆகியோர் முன்னிலை வகித்தார்கள். கற்பி சமூக கல்வி மையத்தின் இரா.விடுதலைச்செல்வன் வரவேற்புரையாற்றினார்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பெரம்பலூர் டாக்டர் அம்பேத்கர் சமூகக் கல்விப் பொருளாதார அறக்கட்டளையின் இரா.க.கிருஷ்ணசாமி, பாடகர் மா.பா. கண்ணையன், கழகப் பொருளாளர் துரைசாமி, தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர்சிவகாமி, தி.வி.க. திருப்பூர் மாவட்டத் தலைவர் முகில் ராசு ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். தோழர் மா.தேவராஜ் நன்றி கூறினார்.

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/22-24 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/22-24
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# டிசம்.24 பெரியார் நினைவு நாள் : தோழர்கள் ஊர்வலம்

திராவிடர் விடுதலைக் கழகம் சென்னை மாவட்டத்தின் சார்பாக பெரியாரின் 49 ஆவது நினைவு நாளை ஒட்டி, இராயப்பேட்டை வி.எம்.தெரு பெரியார் படிப்பகத்தில் உள்ள பெரியார் சிலைக்கு காலை 9 மணியளவில் மாலை அணிவிக்கப்பட்டது.

தொடர்ந்து, தியாகராயர் நகர் பெரியார் சிலை, எம்.ஜி.ஆர். நகர், ஆலந்தூர், வன்னியம்பதி, மயிலாப்பூர் சென்மேரிஸ் பாலம், சுப்பராயன் சாலை ஆகிய பகுதிகளில் உள்ள பெரியார் சிலை, உருவபடங்களுக்கு தோழர்கள் ஊர்வலமாக சென்று மாலை அணிவித்தனர்.

ஒவ்வொரு பகுதியிலும் பெரியார் நினைவு மற்றும் கொள்கை முழக்கங்கள் எழுப்பப்பட்டன. நிகழ்வுகள் மாவட்ட செயலாளர் இரா.உமாபதி தலைமையில் நடைபெற்றது.

தலைமைக் கழக பொறுப்பாளர்கள், மாவட்டம், பகுதி கழக பொறுப்பாளர்கள் மற்றும் சென்னை கழக தோழர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

**சேலம்:** சேலம் மேற்கு மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பாக தந்தை பெரியார் 49ஆவது நினைவு நாள் 24-12-2022 சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் மாவட்டச் செயலாளர் சி.கோவிந்தராஜ் தலைமையில் நடைபெற்றது.

மேட்டூர் சமத்துவபுரத்தில் உள்ள பெரியார் உருவச்சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு கொள்கை முழக்கங்கள் எழுப்பப்பட்டது.

மாவட்டச் செயலாளர் சி.கோவிந்தராசு மகள் தேன்மொழி - மணிகண்டன் இணையர்களின் பெண் குழந்தைக்கு தே.ம. மகிழினி என பெயர் சூட்டப்பட்டு கேக் வெட்டி இனிப்புகள் வழங்கப்பட்டது. மேட்டூர் நகரச் செயலாளர் குமரப்பா தோழர்களுடன் கொள்கை முழக்கமிட்டனர்.

நிகழ்வில் மேற்கு மாவட்டத் தலைவர் தோழர் சூரியகுமார், தலைமை செயற்குழு உறுப்பினர் சக்திவேல் மற்றும் நங்கவள்ளி, வனவாசி ஒன்றிய பொறுப்பாளர்களும், தோழர்களும், மேட்டூர் நகரம், மேட்டூர் RS, கொளத்தூர் பகுதி பொறுப்பாளர்களும், தோழர்களும் திரளாகக் கலந்து கொண்டனர்.

நங்கவள்ளி, வனவாசி, மேட்டூர் RS, மேட்டூர், கொளத்தூர், காவலாண்டியூர் ஆகிய பகுதிகளில் தந்தை பெரியார் நினைவு நாள் சுவரொட்டிகளும், கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராஜேந்திரன் நூல்களை தமிழக அரசு அரசுடமையாக்கியதற்கு நன்றி தெரிவிக்கும் சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டது.

**கள்ளக்குறிச்சி :** 24.12.2022 அன்று பெரியாரின் 49 வது நினைவு நாள் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் காலை 09 மணியளவில் கடுவனூர் பேருந்து நிலையத்தில் பெரியாரின் உருவப்படத்துக்கு மா. குமார் ரிஷிவந்திய ஒன்றிய தலைவர் தலைமையில் மலர் தூவி மரியாதை செய்யப்பட்டது.

காலை 11.மாணி அளவில் சங்கராபுரத்தில் உள்ள தந்தை பெரியார் சிலைக்கு சி.சாமிதுரை மாவட்ட அமைப்பாளர் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இதில் மு.நாகராஜ் - மாவட்ட துணை செயலாளர், வீ. முருகன் - அறிவியல் மன்ற அமைப்பாளர், இரா. கார்மேகம் - ரிஷிவந்தியம் ஒன்றிய அமைப்பாளர், மா. குமார் - ரிஷிவந்தியம் ஒன்றிய தலைவர், கடுவனூர் ஊராட்சி மன்றத் தலைவர் - அ. ஏழுமலை, கு. பாபா, ர. ஜீவா, மெ. சுபாஷ், ச. விக்ரம், க.ரமணா, ர. சுபாஷ் மனோ, ச. சச்சின் ஆகிய தோழர்கள் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து, புதூரியில் உள்ள தந்தை பெரியார் சிலைக்கு காலை 11.30.மணியளவில் திராவிடர் கழகம் ரா. சண்முகம் ஒன்றிய செயலாளர் தலைமையில் மாலை அனிவித்து மரியாதை செலுத்தப் பட்டது இதில் திராவிடர் கழகம் தோழர்கள் கி. ஆனந்தன் மற்றும் திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் சி. சாமிதுரை மு.நாகராஜ் மா. குமார் இரா.கார்மேகம் கு. பாபா ர. சுபாஷ் ஆகிய தோழர்கள் கலந்து கொண்டனர்.

**கோவை :** பெரியாரின் 49 ஆவது நினைவு நாள் கோவை மாநகர திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் முதலாவதாக இரத்தினபுரி டாட்டாபாத் ஆறுமுக்கு பகுதியில் பெரியாரின் பொன்மொழிகளுடன் பதாகை வைத்து வெங்கட் தலைமையில் கொள்கை முழக்கங்கள் எழுப்பி சிறப்பாக நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சியில் இரஞ்சித் உறுதிமொழி வாசித்தார். தோழர்கள் சிவராசு, புரட்சித்தமிழன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் கோவை மாவட்ட துணை செயலாளர் குரு உள்ளிட்டோர் உரையாற்றினர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஜீவா மன்ற செயலாளர் சாந்தகுமார் மற்றும் துணைச் செயலாளர் அன்பரசு அலுவலகம் கொடுத்து உதவினர்.

**சித்தாபுதூர் :** லோகு தலைமையில் சித்தாபுதூர் பகுதியில் பெரியார் நினைவு நாள் நிகழ்ச்சி நடைபெற்றது. சித்தாபுதூர் பகுதி தோழர்கள் பெரியார் படத்தை சிறப்பாக அலங்கரித்து வைத்திருந்தனர். மாநகர தோழர்கள் கலந்து கொண்டு கொள்கை முழக்கம் எழுப்பினர்.

**காந்திபுரம் :** பெரியார் சிலைக்கு தலைமை தாங்கிய மாதவன் மாலை அணிவித்தார். இசைமதி உறுதிமொழி வாசித்தார். தோழர்கள் வெங்கட், தலைமைக் குழு உறுப்பினர் பன்னீர் செல்வம், மாதவன் ஆகியோர் உரையாற்றினர். தோழர்கள் கொள்கை முழக்கம் எழுப்பி நிகழ்வு சிறப்பாக நிறைவு பெற்றது.

இந்நிகழ்வில் கோவை மாநகர கல்விக் குழுத் தலைவர் மாலதி (திமுக) மற்றும் திமுக மகளிர் அணியினர் கலந்து கொண்டனர். அனைவருக்கும் புரட்சித் தமிழன் தேநீரும் சிற்றுண்டியும் வழங்கினார்.

**பீளமேடு :** கிருஷ்ணன் தலைமையில் பெரியார் நினைவு நாள் நிகழ்வு நடைபெற்றது. பெரியார் பிஞ்சு நிலா அறிவரசு உறுதிமொழி வாசித்தார். சூலூர் பன்னீர்செல்வம் உரையாற்றினார். ஆதரவாளர் அலெக்ஸ் அவர்களின் பெரியாரின் உழைப்பை நினைவு கூறும் கவிதையை சிவராசு வாசித்தார். கொள்கை முழக்கங்களுடன் நிகழ்ச்சி சிறப்பாக நிறைவு பெற்றது .

**சவுரிபாளையம் :** சிவராசு தலைமையில் பெரியார் நினைவு நாள் நிகழ்ச்சி நடைபெற்றது. பொன்மணி உறுதிமொழி வாசித்தார். தொடர்ந்து புரட்சித் தமிழன், நிர்மல் குமார் உரையாற்றினர். கலந்து கொண்ட தோழர்கள் அனைவருக்கும் தேநீரும் சிற்றுண்டியும் சிவராசு வழங்கினார்.

**மேட்டுப்பாளையம் :** பேருந்து நிலையத்தில் மாவட்டத் தலைவர் இராமச்சந்திரன் தலைமையில் பெரியார் படத்துக்கு மாலை அணிவித்து கொள்கை முழக்கங்கள் எழுப்பி மரியாதை செய்யப்பட்டது. இந்த நிகழ்வில் திராவிடர் கழகப் பொறுப்பாளர் வேலுச்சாமி உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

மாநகரில் கலந்து கொண்ட தோழர்கள் சூலூர் பன்னீர்செல்வம், நிர்மல் குமார், வெங்கட் , கிருஷ்ணன், லோகு, மாதவன், சிவராசு, இரஞ்சித் இசைமதி, நிலா அறிவரசு, பொன்மணி, புரட்சித் தமிழன், இராஜாமணி, காளிபாளையம் கணேஷ் , அமிலா, சதீஷ், இயல், இரவி, எழிலரசன் (திமுக), பிரபு, சிவா, தமிழேந்தி, பெரியார் பிஞ்சு சுருதி, தமிழினி, அக்ரஜ், கனல்வழி.

**திருப்பூர் :** திருப்பூர் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் தந்தை பெரியாரின் 49 ஆவது நினைவு நாளான 24.12.22 சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் திருப்பூர் இரயில் நிலையம் அருகில் உள்ள தந்தை பெரியார் சிலை முன்பு ஜாதி ஒழிப்பு உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு மாநகரச் செயலாளர் மாதவன் தலைமை தாங்கினார். மாவட்டத் தலைவர் முகில் இராசு முன்னிலை வகித்தார்.

முதல் நிகழ்வாக கழகப் பொருளாளர் துரைசாமி தந்தை பெரியார் சிலைக்கு மாலை அணிவித்தார். பின்பு மாணவர் கழகத் தோழர் மகிழவன் கொள்கை முழக்கங்கள் எழுப்ப தோழர்கள் தொடர்ந்து முழக்கமிட்டனர். யாழினி, ஜாதி ஒழிப்பு உறுதிமொழியைக் கூற தோழர்கள் அனைவரும் தொடர்ந்து உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.

இந்நிகழ்வில் கழக இணைய தளப் பொறுப்பாளர் பரிமளராசன், மாவட்டச் செயலாளர் நீதிராசன், தெற்குப பகுதி கழக செயளாளர் இராமசாமி, மாநகரத் தலைவர் தனபால், மாநகர அமைப்பாளர் முத்து, 15 வேலம்பாளையம் பொறுப்பாளர் மாரிமுத்து, மாணவர் கழகத் தோழர் மகிழவன் தோழர்கள் அய்யப்பன், மோகன், முத்துலட்சுமி, காளியம்மாள் திலகவதி, வசந்தி, சிரிஜா, மதன், திவ்யா ஈழமாறன் பெரியார் பிஞ்சுகள் யாழினி யாழிசை, பிரபன்யா, அர்சிதா ஆசியோர் கலந்து கொண்டனர்.

## சத்தியில் அறிவியல் மன்ற கருத்தரங்கம்




24.12.2022 சனிக்கிழமை அன்று சத்தியமங்கலம் எஸ்.பி.சி. மகாலில் நடைபெற்ற பெரியார்-அம்பேத்கர் உருவாக்கிய சமூகப் புரட்சி கருத்தரங்கத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்பான முறையில் கருத்துரை வழங்கினார். இக்கருத்தரங்கத்திற்கு மு.தமிழரசன் தலைமை தாங்கினார்.

கூட்டத்தில் திராவிடர் விடுதலைக் கழக மாநில, மாவட்ட, ஒன்றிய, கிளை பொறுப்பாளர்கள், தோழமை அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் 300 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டார்கள். நிகழ்ச்சி தொடக்கத்தில் சத்தி முத்துவின் ‘மந்திரமா தந்திரமா’ நிகழ்ச்சி நடைபெற்றது. தமிழ்நாடு அறிவியல் மன்ற தோழர்கள் கே.எ.கிருஷ்ணசாமி, சதுமுகை பழனிசாமி, சித்தா பழனிசாமி மற்றும் சதுமுகை கனகராஜ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. சிறப்பு அழைப்பாளர்களாக செந்தில்நாதன் வழக்குரைஞர், தமிழ்நாடு அறிவியல் மன்ற தோழர்கள் சேகர், வேலுச்சாமி, வீரா. கார்த்தி, சுந்தரம், குப்புசாமி, சிவக்குமார் மற்றும் சரத் அருள்மாறன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வெளியீட்டுச் செயலாளர் இராம.இளங்கோவன், தலைமைக் கழகப் பேச்சாளர் கா.சு.வேலுச்சாமி, மாவட்ட தலைவர் நாத்திக ஜோதி, சிவகாமி (தலைவர், தமிழ்நாடு அறிவியல் மன்றம்), மாவட்ட அமைப்பாளர் - நிவாசு, மாவட்ட பரப்புரைஅணி செயலாளர் - வேணுகோபால் மற்றும் மாவட்ட செயலாளர் எலத்தூர் செல்வக்குமார் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினார்கள்.

விடுதலை சிறுத்தைகள் கட்சி பவானிசாகர் சட்ட மன்ற பொறுப்பாளர் தம்பிதுரை, தமிழ்ப் புலிகள் கட்சி தலைமை நிதி செயலாளர் அப்துல்லா மற்றும் சமூக நீதிக் கட்சி மாவட்டச் செயலாளர் தேவராஜ் ஆகியோரும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். நிகழ்ச்சி இறுதியில் பிரபாகரன் - காயத்திரி குழந்தைக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி அவர்களால் ‘நிறைமதி’ என்ற பெயர் சூட்டப்பட்டது.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 30th December 2022

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN